**THE LABOUR COURT, SALEM**

**C.P.No. 1 of 2017**

**14.08.2023**

**WW1 – ராமலிங்கம் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரர் கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக ஜூலை 2011ல் பணி ஓய்வு பெற்றேன். அந்த சொசைட்டியை பொறுத்தவரை நான்தான் உயர் அதிகாரி என்றால் சரியல்ல, நான் ஒரு தொழிலாளி. கூட்டுறவு சங்கத்திற்கு துணை விதி உள்ளது. அதில் செயலாளர்தான் தலைமை நிர்வாகி என்றால், சரியல்ல. தனிஅலுவலர்தான் தலைமை நிர்வாகி. தனிஅலுவலருக்கு கூட்டுறவு சங்கத்தில் சம்பளம் கொடுப்பதில்லை, அவர் ஒரு அரசு ஊழியர். அவர் 3,4 சங்கங்களுக்கு தனிஅலுவலராக பணியாற்றுவார். கூட்டுறவு சங்கத்தின் அலுவலக சாவி என் வசம்தான் இருக்கும். எனக்கு கீழே 8 ஊழியர்கள் பணியாற்றினார்கள். அக்கவுண்டன், கிளர்க், கேசியர், சேல்ஸ்மேன், அட்டன்டர் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். அவர்களின் வருகைப்பதிவேட்டை நான்தான் பராமரிப்பேன். ஊழியர்களின் விடுமுறையை நான்தான் கொடுப்பேன் என்றால் சரியல்ல, தனிஅலுவலர்தான் கொடுப்பார். எனக்கும் தனிஅலுவலர்தான் கொடுப்பார்.

எங்கள் கூட்டுறவு சங்கத்திற்கு நிர்வாக குழு இல்லை. தனி அலுவலர்தான் உள்ளார். தேர்தல் நடந்தால் நிர்வாகக்குழு வரும். தற்போது தேர்தல் இல்லை. நான் பணிஓய்வு பெறும்போது நிர்வாகக்குழு இல்லை. தனிஅலுவலர்தான் இருந்தார். என்னுடைய பணிஓய்வுக்கு முன் சுமார் 10 ஆண்டுகளாக சங்கத்தேர்தல் தமிழ்நாடு அளவில் நடைபெறவில்லை. தனிஅலுவலர்தான் நியமிக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் நான் கிளர்க்காக பணியில் சேர்ந்தேன். சங்க நிர்வாகக்குழுதான் என்னை பணியில் அமர்த்தியது. அதன் பின் எனக்கு செயலாளராக பணிமூப்பு அடிப்படையில் உயர் பணி நிர்வாகக்குழு வழங்கியது. அந்த சங்கத்தை பொறுத்தவரை நான்தான் உயர்அதிகாரி. எனக்கு எந்தெந்த தலைப்பின் கீழ் பணிஓய்வுக்கு பின் பணம் கிடைக்கவேண்டும் என்று கூட்டுறவு சங்க பதிவாளரிடம் பட்டியல் கொடுத்து கேட்கவில்லை என்றால், சரியல்ல. பணிஓய்வுக்கு முன்பு வரை நிர்வாகத்திலிருந்து எனக்கு எந்த நிலுவை தொகையும் இல்லை. பணிக்கொடைக்காக பணிவழக்கு தாக்கல் செய்தேன் பணிக்கொடை தொகையை நிர்வாகம் கொடுத்ததை பெற்றுக்கொண்டேன். 30 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கான சம்பளமான ரூ.10,132/−ஐ கேட்டுள்ளேன். அந்த தொகை நிர்வாகம் எனக்கு கொடுத்துவிட்டது. அதை நான் பெற்றுக்கொண்டேன்.

மேற்படி அந்த தொகையை 19.06.2014 அன்று 240 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு மற்றும் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புடன் சேர்த்து அந்த 30 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை மொத்தமாக ரூ.2,01,348/−ஐ வருவாய் வில்லை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இட்டு பெற்றுக்கொண்டேன் என்று வினவி அதற்கான ஒளிநகல் ஆவணத்தை சாட்சியிடம் காட்டி வினவியபோது சாட்சி ஒத்துக்கொள்வதால் அது Ex.R1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பணிஓய்வு பெற்ற பின்னர் நிர்வாகத்தால் 4 தலைப்புகளில் வருங்கால வைப்பு நிதி, அதற்கான வட்டி, பணிக்கொடை, 240 நாள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஆகிய பணம் கணக்கிட்டு மொத்தமாக ரூ.13,87,595/−ஐ நிர்வாகம் எனக்கு வழங்கிவிட்டது என்று சொல்லி அதற்கான ஆவணத்தின் நகலை சாட்சியிடம் காட்டி வினவியபோது சாட்சி ஒத்துக்கொள்வதால் அது Ex.R2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 4 இணங்களில் தனித்தனியாக பணம் பெற்றதற்கான வருவாய் வில்லை ஒட்டி

அதன் கையொப்பம் போட்டுள்ளேன். அந்த பதிவேடுகளின் நகல்கள் முறையே Ex.R3 to R6 ஆக குறியீடு செய்யப்பட்டது. ஆனால் அந்த பணம் பணிஓய்வு பெற்ற பின் காலம்தாழ்த்திதான் கொடுக்கப்பட்டது. மேலும் எனது காப்புத்தொகை ஆவணத்தை திருப்பி தரவில்லை. அதை கேட்டும் இவ்வழக்கு. ஒரே பதவியில் 10 ஆண்டுக்கு மேல் இருந்தால் மிகை ஊதியமாக ரூ.15,440/−ஐ கேட்டுள்ளேன்.

நான் மிகை ஊதியம் பெறுவதற்கு எந்த ஆண்டு தகுதியானவன் என்றால், 01.02.1981ல் செயலாளராக பணியமர்த்தப்பட்டேன். 01.02.1991ல் நான் மிகை ஊதியம் பெற தகுதியானேன். அவ்வாறு 2001ல் 10 ஆண்டுக்கு பின்னர் மற்றொரு மிகை ஊதியம் பெற்றுக்கொண்டேன். அவ்வாறு 2011ல் 30 ஆண்டுக்கு மேலாக அதே பதவியில் இருந்தால் அதற்கு ஒரு மிகை ஊதியம் தரவேண்டும். மேற்படி துணை பதிவாளர் உத்தரவிட்ட மிகைப்படி ரூ.15,440/ஐ நிர்வாகம் வழங்கவேண்டும். Ex.P10ல் துணைப்பதிவாளர் உத்தரவிட்ட 4 இனங்களில் 1 மற்றும் 3வது இனங்களில் கண்ட தொகையை நான் பெற்றுக்கொண்டேன். 2வது இனத்தில் சொல்லப்பட்ட பாதுகாப்பு தொகை ரூ.1000/−ஐ நான் பணி ஓய்வு பெற்ற தேதியிலிருந்து எனக்கு வட்டியுடன் கிடைக்கவேண்டும். 4 வது இனத்தில் சொல்லப்பட்ட ரூ.15,440/−ஐ நிர்வாகம் கொடுக்கவில்லை. அதை எனது பணிஓய்வு பெற்ற தேதியிலிருந்து நிர்வாகம் வட்டியுடன் கொடுக்கவேண்டும். எனக்கு சேரவேண்டிய தொகையை காலம்தாழ்த்தி கொடுத்ததால மனவில் கோரியுள்ளபடி வட்டியுடன் கொடுக்கவேண்டும். சங்க பாதுகாப்பு விதியின் படி வட்டி கொடுக்கவேண்டியதில்லை என்றால், துணை விதி அதைப்பொறுத்து அமைதியாக உள்ளது. நான் வட்டி கேட்கிறேன். காலம் தாழ்த்தி கொடுக்கவேண்டய தொகைக்கு வட்டி கொடுக்கவேண்டும் என்று பைலாவில் விதி இல்லை. நான் செயலாளராக பணியாற்றியபோது சங்க விதிமுறைக்கு மீறி சில உறுப்பினர்களுக்கு கடன் கொடுத்து அது வசூல் ஆகாமல் இருந்தது என்றால், சரியல்ல. அதன் அடிப்படையில்தான் எனக்கு சேரவேண்டிய நிலுவை

தொகைகளை நிர்வாகம் தள்ளி வைத்தது என்றால், சரிதான். அதன் அடிப்படையில் என்னை பணியிலிருந்து விடுவித்தபோது அந்த கடன் தொகை வசூலாகும் வரை எனக்கு சேரவேண்டிய ஓய்வுதிய தொகை நிறுத்திவைத்து சங்கம் எனக்கு ஒரு செயல் முறை ஆணையை 30.07.2011 அன்று வழங்கியது என்று சொல்லி அதற்கான உண்மை நகலை சாட்சியிடம் காட்டி வினவியபோது அந்த செயல்முறை ஆணை, அத்துடன் இணைந்த தீர்மான உண்மை நகல்கள் மற்றும் தனிக்கை அறிக்கைகோப்பு Ex.R7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் கடன் வசூல் ஆகிவிட்டது. எனவே எனக்கு சேரவேண்டிய நிலுவை தொகையில் நான் வட்டி கோரமுடியாது என்றால் சரியல்ல. மேற்படி நிலுவை தொகைக்கு நான் வட்டிகோர இயலாது என்றால் சரியல்ல. கடன் காலதாமதமாகி வசூல் ஆனதால் சங்கத்திற்கு தனிக்கை அறிக்கையின்படி ரூ.50 இலட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது என்றால், அது 15 ஆண்டுகாலத்திற்கான சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு ஆகும். நான் 33 ஆண்டுகளாக தொடர்ந்து செயலாளராக பணியாற்றிய காலத்தில்தான் அந்த நிதி இழப்பு சங்கத்திற்கு ஏற்பட்டது என்றால், அது அரசாங்க கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்ட இழப்பாகும். என்னுடைய காலகட்டத்தில் சங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டதால் என் பணிஓய்வு தொகையை நிறுத்திவைத்து 2 இனங்களை தவிர மற்ற இனங்களைப்பொறுத்து தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

Sd/ (Dr.P. Murugan)
Presiding Officer,
Labour Court, Salem.